**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை

**I.A.No.6/2025 and I.A.No.7/2025**

**in**

**I.A.No.5/2025 in O.S.No.163/2015**

ரெங்கசாமி ... மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரர்/
3 ம்பிரதிவாதி

**/எதிர்/**

1. மாரியம்மாள்
2. காளிராஜ்
3. அருணாசலம்
4. ராஜேஸ்வரி ... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/
வாதி/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 29.10.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் I.A.No.5/2025 மனுவில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுக்கள், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 மற்றும் கட்டளை 8 விதி 1 (a) ஆகியவற்றின் கீழ், மனுதாரர்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:20:03 +0530

தரப்பு சான்றாவணங்களை I.A.No.5/2025 மனுவில் குறியீடு செய்து கொள்ளும் வகைக்கு 07.10.2025 அன்று Clarification–க்காக வாய்தா ஏற்பட்டுள்ள I.A.No.5/2025 மனுவை மறுதிறவு செய்யக்கோரியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.06/2025 மற்றும் 07/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>**

இம்மனுக்களின் மனுதாரர் அசல் மனுவில் 3ம் எதிர்மனுதாரர் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கும் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து இவ்வழக்கின் பரிகாரத்தை சீர்திருத்தம் செய்ய I.A.No.5/2025 in O.S.No.163/2015 என மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் இந்நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பிறப்பிப்பதற்காக 25.09.2025 தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கான O.S.No.26/2001ல் பிறந்த தீர்ப்பு மற்றும் அதனை அனுசரித்து E.P.No.13/2004 மற்றும் O.S.No.26/2001 என்ற வழக்கில் பிறந்துள்ள உத்தரவினை அனுசரித்து வழக்கு சொத்தினை ஏலத்திற்கு எடுத்தும் இந்நீதிமன்றத்திலிருந்து வாழ்விப்பும் பெற்றும், மனுதாரர் தனித்து அனுபவம் செய்துவரும் நிலையில், அதற்குரிய ஆவணங்களான ஏலச்சான்று, அமீனா அத்தாட்சி நகல், டெலிவரி நகல் மற்றும் ரிட்டன் ஆகியவைகளை இம்மனுவில் மனுதார் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய தவறுதலாக விடுபட்டு போய்விட்டது என்றும், ஆகையால், மனுதாரர் தரப்பு சான்றாவணங்களை I.A.No.5/2025 மனுவில் குறியீடு செய்து கொள்ளும் வகைக்கு 07.10.2025 அன்று Clarification–க்காக வாய்தா ஏற்பட்டுள்ள I.A.No.5/2025 மனுவை மறுதிறவு செய்யக்கோரியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் உத்தரவிடக்கோரி இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.05 17:20:10 +0530

2) <u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.06/2025 மற்றும் 07/2025–ன் எதிருரைகளின் சுருக்கம்:–</u>

மனுதாரரின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், இம்மனு உறுதிக்கூற்றுரையில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றும், E.P.No.13/2024 ன் O.S.No.26/2001 என்ற வழக்கில் பிறந்துள்ள உத்தரவினை அனுசரித்து வழக்கு சொத்தினை ஏலத்திற்கு எடுத்தும் இந்நீதிமன்றத்திலிருந்து வாழ்விப்பும் பெற்றும், மனுதாரர் தனித்து அனுபவம் செய்து வரும் நிலையில் அதற்குரிய ஆவணங்களான ஏலச்சான்று, அமீனா அத்தாட்சி நகல், டெலிவரி நகல் மற்றும் ரிட்டன் ஆகியவைகளை இம்மனுவில் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய தவறுதலாக விடுபட்டு போய்விட்டது என்பது தவறு என்றும், அதனால் மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக I.A.No.5/2025 மனுவில் குறியீடு செய்யும் வகைக்கு ரீஓப்பன் செய்யக்கோரும் இம்மனு தள்ளுபடிக்குரியது என்றும், மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு வீண் கஷ்ட, நஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் காலதாமதத்திற்கு எந்தவிதமான சரியான காரணம் எதுவும் சொல்லவில்லை என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) I.A.No.5/2025 in O.S.No.163/2015 மனுவானது Clarification–க்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இ.ம.எண்.07/2025

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.05 17:20:19 +0530

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தற்பொழுது I.A.No.5/2025 மனுவானது Clarification—க்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

6) மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கான O.S.No.26/2001ல் பிறந்த தீர்ப்பு மற்றும் அதனை அனுசரித்து E.P.No.13/2024 in O.S.No.26/2001 என்ற வழக்கில் பிறந்துள்ள உத்தரவினை அனுசரித்து வழக்கு சொத்தினை ஏலத்திற்கு எடுத்தும் இந்நீதிமன்றத்திலிருந்து வாழ்விப்பும் பெற்றும், மனுதாரர் தனித்து அனுபவம் செய்துவரும் நிலையில், அதற்குரிய ஆவணங்களான ஏலச்சான்று, அமீனா அத்தாட்சி நகல், டெலிவரி நகல் மற்றும் ரிட்டன் ஆகியவைகளை இம்மனுவில் மனுதார் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய தவறுதலாக விடுபட்டு போய்விட்டது என்றும் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் மனுதாரரால் இம்மனுவில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரரால் மனுவில் கூறப்பட்டுள்ள காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

7) மேலும், இம்மனுக்களின் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் E.P.No.13/2024 ன் O.S.No.26/2001 என்ற வழக்கில் பிறந்துள்ள உத்தரவினை அனுசரித்து வழக்கு சொத்தினை ஏலத்திற்கு எடுத்தும் இந்நீதிமன்றத்திலிருந்து வாழ்விப்பும் பெற்றும், மனுதாரர் தனித்து அனுபவம் செய்து வரும் நிலையில் அதற்குரிய ஆவணங்களான ஏலச்சான்று, அமீனா அத்தாட்சி நகல், டெலிவரி நகல் மற்றும் ரிட்டன் ஆகியவைகளை இம்மனுவில் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய தவறுதலாக

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:20:27 +0530

விடுபட்டு போய்விட்டது என்பது தவறு என்றும், மனுதாரர் காலதாமதத்திற்கு எந்தவிதமான சரியான காரணம் எதுவும் சொல்லவில்லை என்றும் இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) இருப்பினும், மனுதாரரால் இ.ம.எண்.07/2025 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் I.A.No.5/2025 மனுவின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) ஆகையால், I.A.No.5/2025 மனுவானது மறுதிறவு செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.07/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

10) இருப்பினும், மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில்கொண்டு, இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**11) இறுதியாக**

**இ.ம.எண்.06/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 12.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 12.11.2025.

**இ.ம.எண்.07/2025**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.05 17:20:36 +0530

and Relevancy) ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 12.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 12.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:20:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:- - இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:20:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.06/2025 and
I.A.No.07/2025
in
I.A.No.05/2025
in
O.S.No.163/2015
உத்தரவு (Draft / Fair)
நாள் : 05.11.2025